NOVEMBER/DECEMBER 2025

23PETA14B — பெரியாரியல்

Time : Three hours

Maximum : 75 marks



பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. வைகுண்டசுவாமிகள் தனது சீர்திருத்தப் பணிகளை எங்கு, ஏன் மேற்கொண்டார்?

2. பாரதியார் பெண்கள் விடுதலை குறித்து வலியுறுத்தும் முக்கிய கருத்துகள் யாவை?

3. திராவிடர் கழகத்தின் முதல் தலைவர் பற்றி சிறுகுறிப்பு தருக.

4. சுயமரியாதை இயக்கத்தின் நோக்கத்தைக் குறிப்பிடுக.

5. பெரியார் எதை "சிறந்த நெறிமுறை நூல்" என்று குறிப்பிட்டார்?

6. இந்தித்திணிப்புக்கு எதிராக பெரியார் மேற்கொண்ட முக்கிய நடவடிக்கை எது?

7. பெரியார் அறிவியல் பார்வையை எவ்வாறு வரையறுத்தார்?

8. பகுத்தறிவை பெரியார் எதற்கெதிராகப் பயன்படுத்தினார்?

9. விதவைகள் மறுமணம் செய்யும் உரிமையை பெரியார் எந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் ஆதரித்தார்?

10. சுயமரியாதைத் திருமணத்தில் எந்த வழக்கத்தை நீக்கினார்?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

11. (அ) ஜி.சுப்பிரமணிய ஐயரின் பங்களிப்புகளை மதிப்பிடுக.

(அல்லது)

(ஆ) வள்ளலாரின் "சமரச சுத்த சன்மார்க்கம்" கொள்கையை விளக்குக.

12. (அ) இந்திய விடுதலை இயக்கத்தில் பெரியார் செய்த பங்களிப்புகளை தெளிவுப்படுத்துக.

(அல்லது)

(ஆ) பெரியாரின் சிந்தனைகள் சமகாலத்தில் பெற்ற வெற்றிகளை பட்டியலிடுக.

13. (அ) திருக்குறளுக்கு பெரியார் காட்டிய பார்வையை விளக்குக.

(அல்லது)

(ஆ) பெரியார் மொழிக்கொள்கையின் முக்கிய அம்சங்களை எழுதுக.

Shanmuga Industries Arts & Science College R.V.Malai

14. (அ) சாதி ஒழிப்பு குறித்து பெரியார் எடுத்த நடவடிக்கைகளை திறனாய்வு செய்க.

(அல்லது)

(ஆ) பெரியாரின் கண்ணோட்டத்தில் சுயமரியாதை என்பதை விளக்குக.

15. (அ) குழந்தை திருமண ஒழிப்பிற்காக பெரியாரின் முன்னெடுப்புகளை வகைப்படுத்துக.

(அல்லது)

(ஆ) பெண்கள் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு குறித்து பெரியார் எடுத்த முயற்சிகளை விளக்குக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.

16. அயோத்திதாசரும் இரட்டைமலை சீனிவாசனும் சமூகச் சீர்திருத்தத்தில் செய்த பங்களிப்புகளை ஒப்பிடுக.

17. சுயமரியாதை இயக்கமும் திராவிடர் கழகமும் சமூகத்தில் ஏற்படுத்திய மாற்றங்களை எடுத்துரைக்க.

18. பெரியாரின் தமிழ்மொழி குறித்த சிந்தனைகளை விரித்துரைக்க.

19. பெரியார் சுயமரியாதை, பகுத்தறிவு மற்றும் சாதி ஒழிப்பு சிந்தனைகளைத் தெளிவுப்படுத்துக.

20. மணவிலக்கு உரிமை, கர்ப்பத்தடை மற்றும் சொத்துரிமை தொடர்பாக பெரியாரின் சிந்தனைகளை விவரிக்க.

———————